தமிழ்ச் சிட்டு

ஊக்கத்தைக் கைவிடாதே!

குறை சொல்ல ஆயிரம்
பேர் வருவார் — ஒரு
கோலை நடமாட்டார்! — சென்று
மறைவினில் ஆயிரம்
சொள்ளை சொல்வார் — செய்ய
மனங் கொண் டிடவும்மாட்டார்!

ஆக்கிப் படைப்பதில்
சுவை தேறுவார் — ஒன்றை
ஆக்க வரமாட்டார்! — உழைத்துத்
தேக்கிய விளைவுக்குக்
கணக்குக் கேட்பார் — பங்கு
கேட்கவும் கூச மாட்டார்!

இவ்வாறு பற்பலர்
இருந்திடுவார் — தம்பி
எண்ணி வருந்தாதே! — உனக்கு
ஒவ்வாத பேர்களை
ஒதுக்கிச் செய்வாய் — தம்பி
ஊக்கத்தைக் கைவிடாதே!

குரல் : 22
இசை : 2

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை :
உருபா :1-50

தெரிந்து கொள்ளுங்கள்

- பழங்காலத்தில் ஆமணக்கு நெய்யையே விளக்கு எரிக்கப் பயன்படுத்தியதால் தமிழில் அதற்கு விளக்கெண்ணெய் என்று பெயர் ஏற்பட்டது. ஆனாலும் கோயில்களில் எரிக்கப்பெற்ற விளக்குகளுக்கு இலுப்பை நெய்யும், நல்லெண்ணெய் என்று கூறப்பெறும் எள்நெய்யுந்தான் பயன்படுத்த வேண்டும் என்று மதநடைமுறைகள் கூறுகின்றன.

- இந்தியாவில் காவல் நிலையத்தில் குற்றவாளிகள் இறப்பது மிகுந்துள்ளது.

- மாங்காய்களைச் செயற்கை முறைகளில் விரைவில் பழுக்க வைக்க மாங்காய்க் குவியல்களுக்கு நடுவில் 'கால்சியம் கார்பைட்' என்னும் வேதியல் பொருளைத் துணியில் முடிச்சாகக் கட்டி வைக்கிறார்கள். இப்படிச் செய்வதால் இவை இரண்டு நாள்களில் பழுத்து விடுமாம். இதற்கு முன் புகை போட்டுப் பழுக்க வைக்கும் பழக்கமும் இருந்தது.

- உலகில் மூன்று இலக்கம் பூக்கும் நிலைத்திணைகள் (தாவரங்கள்) உள்ளன. இவை தவிர பூவாத வகைகள் பல இலக்கம் உள்ளன. இவையனைத்திலும் மாந்தர்கள் 103 பயிர் வகைகளை மட்டுந்தான் உணவுக்காக அதிக அளவில் பயிர் செய்கிறார்கள். மேலும் சில நூறு வகைகள் ஏனைய பயன்படுத்தத்திற்காக வளர்க்கின்றனர். இருந்தபோதிலும் பல்லாயிரக்கணக்கான நிலைத்திணைகளை மாந்தர்கள் பயன்படுத்துவதேயில்லை.

- இந்தியாவில் 1990-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 4,90,000 (4 இலக்கத்துத் தொண்ணூறாயிரம்) பெரிய அளவிலான குற்றங்கள் நடந்துள்ளன என்று தேசிய குற்றப் பதிவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

- 1991-ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண்களுக்கு எதிராக 25000 கற்பழிப்புகள், மானஇழிவு நிகழ்ச்சிகள், 2500 வரதட்சணைக் கொடுமைச் சாவுகள் நிகழ்ந்துள்ளன.

- கற்றாழைச் செடியில் ஏறத்தாழ 275 வகைகள் உள்ளனவாம்.

- பல வகையிலும் அடித்துத் துன்புறுத்தி வளர்க்கப்படும் பிள்ளைகள்தாம் பெரியவர்கள் ஆகையில் முரட்டுத்தனமாக அரம்பர்களாக—ரௌடிகளாக-மாறுகிறார்கள் என்று அத்தகைய பல நூற்றுக்கணக்கானவர்களை ஆராய்ந்த பிரிட்டிசு மக்கள் மனவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

- இந்தியாவில் மொத்தம் 260 ஒலிப்பேழை (கேசட்) உருவாக்க நிறுவனங்கள் உள்ளன. ஒலிப்பேழை உருவாக்கத்தில் உலக நாடுகளில் மூன்றாவது இடத்தை இந்தியா பெறுகிறது.

- கடந்த 25 ஆண்டுகளில் மட்டும் இலங்கையிலிருந்து 11,862 குழந்தைகள் விற்கப்பட்டுள்ளன. இவற்றுள் 911 குழந்தைகள் மட்டுமே அரசு இசைவுடன் செய்யப்பட்டுள்ளன. மீதிக் குழந்தைகள் கள்ளத்தனமாக விற்கப்பட்டுள்ளன. மொத்த குழந்தை விற்பனையில் ஏறத்தாழ பாதிக்கு மேல் சுவீடன், நெதர்லாந்து நாடுகளிலே விற்பனையாகியுள்ளன.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2023) துலை (செப் நவ: 92) [இசை 2

வரலாறு மறைக்கப்படுகிறது! தமிழ் இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்-5

ஆரியப் பார்ப்பனர்கள் தமிழ்மொழியை என்றுமே எப்பொழுதுமே பாராட்டுவதில்லை; ஏதோ பிழைப்புக்காக, தவிர்க்க முடியாமல், தமிழ் பேசி வாழ்கிறார்களே தவிர, உண்மையில் தமிழை அவர்கள் விரும்புவதில்லை. அதை வளர்க்க வேண்டும் என்று மனதார எண்ணுவதில்லை. தமிழை எப்பொழுதும் அவர்களின் இன மொழியான சமசுக்கிருதத்தினும் தாழ்த்தியேதான் வைத்துப் பேசுவா. அவர்கள் வீடுகளில் தமிழில் பேசி, எழுதி, படித்து வாழவேண்டிய கட்டாயத்தால் தமிழை அவர்களுக்கே உரிய வகையில், ஒரு கொச்சை வடிவில் பேசுகின்றனர். இதை விடாப்பிடியாக, வழிவழியாகச் செய்து வருகின்றனர். எனக்கு, உனக்கு என்பதை நேக்கு, நோக்கு என்றுதான் அவர்கள் பேசுவார்கள். படித்தவர்களாக இருந்தாலும் கூட, வருகிறீர்களா, போகிறீர்களா என்பதை வரேளா, போறேளா என்றும், அவர்கள், இவர்கள் என்பதை அவாள், இவாள் என்றுமேதான் அவர்கள் வீட்டில் உள்ள அனைவரும் பேசுகிறார்கள். அவர்களுக்கென்று ஒரு தனிப் பலுக்கல்(உச்சரிப்பு) முறையோடுதான் தமிழை இன்றுவரை பேசி வருகிறார்கள்,

தமிழை இவ்வாறு ஆரியக் கொச்சை மொழியாகப் பேசுவது தவிர, இன்றளவும், தமிழோடு சமசுக்கிருதம் கலந்துதான் பேசுவார்கள். தப்பித் தவறியும் ஒரு பார்ப்பனப் பையனோ, பெண்ணோ, மாமியோ, மாமாவோ 'தண்ணீர்' என்றோ, 'சோறு' என்றோ, 'வணக்கம்' என்றோ சொல்ல மாட்டார்கள். அவற்றை 'ஜலம்' என்றும், 'சாதம்' என்றும், 'நமஸ்காரம்' என்றுந்தான் சொல்லுவார்கள். 'வீட்டுக்கு' என்று அவர்கள் வாய்களில் வரவே வராது. 'ஆத்துக்கு' என்றுதான் வரும். அதுவும் இந்தக் காலத்தில் இன்னும் கீழாக ஆங்கிலத்தை வேறு மிக அதிகமாகக் கலந்துதான் பேசுகிறார்கள்.

'திரைப்படம்' என்று படித்த பெரியவர்கள்கூடப் பேசுவதில்லை; 'சினிமா' என்றுதான் சொல்வார்கள். முன்பெல்லாம் 'இசைக் கச்சேரி' 'சதுர்க்கச்சேரி' என்று இசை நிகழ்ச்சியையும், நாட்டிய நிகழ்ச்சியையும் சொல்வார்கள். இப்பொழுதெல்லாம் அந்த நிலை அடியோடு மாறி, 'மியூசிக் பெர்பார்மன்சு' 'டேன்ஸ் புரோகிராம்' என்று ஆங்கிலத்தில்தான் சொல்லுகிறார்கள். 'அத்திம்பேர்' ஆகட்டும் 'அம்மாமி' ஆகட்டும், பெரும்பாலும் எல்லாருமே படித்தவர்கள் ஆகையால், ஒன்று சமசுக்கிருதத்திலேதான் பேசுவார்கள்; இல்லையேல் ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள். தமிழில் பேசினால் அது பார்ப்பனத் தமிழாகத்தான் இருக்கும். முன்பெல்லாம் ஆண்களை 'மாமா' என்றும், பெண்களை 'மாமி' என்றும் பார்ப்பனச் சிறுவர் சிறுமியர் அழைப்பார்கள். இப்பொழுதோ அந்த வழக்கம் அடியோடு போய்விட்டது. 'அங்க்கிள்', 'ஆண்ட்டி' என்றுதான் வாய்க்கு நூறுமுறை அழைக்கிறார்கள். அம்மா, அப்பாவை அவர்கள் 'மம்மி' 'டாடி' என்று அழைப்பது இயல்பாகி விட்டது.

இனி, இவர்களுடன் அதிகமாகத் தொடர்பு வைத்திருக்கும் தமிழ்க் குடும்பத்தார் சிலரும், இவர்களைப் பார்த்து, இவர்களைப் போலவே, 'அவாள்' 'இவாள்' என்று பேசுவதும், 'அங்க்கிள்', 'ஆண்ட்டி' 'மம்மி' 'டாடி' என்று அழைப்பதும் மிகுதியாகி வருகிறது. பார்ப்பனர்கள் தங்களை மதிக்க வேண்டும் என்பதற்காகவே இப் போலித் தமிழர்கள் அவர்களைப் போல் தாங்களும் பேசுவதும் நடப்பதுமாக மாறி வருகிறார்கள்.

இத்தகைய நடைமுறைகளால் தமிழ்மொழி சிதைவுறுகிறது; தாழ்வுறுகிறது; மறைந்து வருகிறது. தமிழ்ப் பண்பாடும் அதைப் போலவே திரிந்து, ஆரியப் பண்பாடாக மாறி வருகிறது. இந்நிலைகள் இயல்பாக நடைபெறாமல் வலுக்கட்டாயமாக, வலிந்து வேண்டுமென்றே பார்ப்பனர்களால் செய்யப் பெற்று வருகின்றன. இவ்வாறு செய்வதற்கும் அவர்கள் தங்களின் கருத்துகளையும், நோக்கங்களையும் மக்களிடையில் புகுத்துவதற்கும் அவர்கள் போதுமான அள்விவ்வலிவான கிழமை, மாத இதழ்கள் செய்தித்தாள்கள் நிறைய இருக்கின்றன. அவற்றுடன் இப்பொழு-

தைய நிலையில் வானொலி, தொலைக்காட்சி ஒலி. ஒளி பரப்பு நிலையங்களிலெல்லாம் பார்ப்பனர்களே மிகுதியும் பணியாற்றி வருகிறார்கள். சில நிலையங்களில் அவர்களைத் தவிர, நம் தமிழர்கள் மருந்துக்குக் கூட இல்லாத அளவில் முழுவதும் அவர்களாகவே இயங்கி வருகிறார்கள்.

இந்த நிலைகளை,—வாய்ப்பு வசதிகளையெல்லாம் அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, முற்ற முடிந்த அளவில், தங்கள் ஆரியச் சார்பான நடைமுறைகளை, பழக்க வழக்கங்களை, பார்ப்பனக் கொச்சைத் தமிழை, சமசுக்கிருதத்தை, ஆங்கிலம் கலந்த கலப்பு மொழியை, நாகரிகத்தை, பண்பாட்டை ஆகியவற்றையெல்லாம் நாள்தோறும், வேளைதோறும், நன்கு ஆழமாக அழுத்தமாகப் பரப்பி வருகிறார்கள். யாரைப் பற்றியும் கவலைப் படுவதில்லை. அவ்வாறு அவர்கள் துணிந்து இந்த வேலைகளையெல்லாம் செய்து வருவதற்கு வாய்ப்பாக, அவர்களே ஆட்சி அதிகாரத்திலும் அமர்ந்திருப்பது அவர்களுக்கு இன்னும் கொண்டாட்டமாக இருக்கிறது. 'தேளுக்கு அதிகாரம் கொடுத்தால், அது நாழிகைக்கு ஒரு கொட்டு கொட்டும்' என்பார்கள். 'நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால், அது கிடைக்கு இரண்டு ஆடுகள் கேட்கும்' என்பார்கள். அப் பழமொழிகளைப் போல, ,பார்ப்பான் அதிகாரத்திற்கு வந்தால், ஊர்ப்பாலை உருட்டுவான், என்பது நடைமுறையில் தெரிகிறது.

வானொலியும் தொலைக்காட்சியும் ஒரே சமயத்தில் இந்தியா முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களோடு தொடர்பு கொள்வதற்குரிய வலிந்த தொடர்புக் கருவிகள். அவற்றை வைத்துக்கொண்டு, இசை, கதை, நாடகம், கலைநிகழ்ச்சிகள் வழியாக ஒவ்வொரு நாளும் அவர்கள் பரப்பி வரும் பார்ப்பனியச் செய்திகள், மத மூட நம்பிக்கைகள், புராண இதிகாசப் பொய் மூட்டைகள் முதலியவற்றுக்கு அளவே இல்லை. அதே பொழுது அவர்கள் நடத்தும் இதழ்கள், செய்தித்தாள்கள் முதலியவற்றின் வழியாகவும் அவை பரப்பப்படுகின்றன. அவற்றுடன், இந்தியா முழுவதும் நாள்தோறும் நடைபெறும் மூட நம்பிக்கைகளைப் பரப்பும் மத ஊர்வலங்கள், விழாக்கள், வேடிக்கைகள் போன்றவற்றுக்கு அளவே இல்லை. இப்படி வாய்ப்புக் கிடைத்த அனைத்துத் துறைகளிலும் அவர்கள் புகுந்து கொண்டு, அவர்கள் சார்பான அத்தனைக் கருத்துகளையும் நாள்தோறும் பரப்பி வருகின்றனர். இவையன்றி ஆட்சியிலுள்ள பார்ப்பன அதிகாரிகளும், பார்ப்பன அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதலானோரும் ஆங்காங்குத் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவில் தங்கள் இனத்துக்கு வலிவூட்டவும் பொலிவூட்டவும் ஆன செயல்களில் மறைமுகமாகவும் நேரிடையாகவும் ஈடுபட்டு வருகிறார்கள். அதே போல் பார்ப்பன ஆசிரியர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், அரசுத்துறை ஆய்வறிஞர்கள் முதலியவர்களும் ஆங்காங்குத் தங்களால் முடிந்த அளவு பார்ப்ப-

னியத்தை நாள்தோறும் வித்தி, விளைவித்து, அறுவடை செய்து வருகிறார்கள். இனி இவர்கள் எல்லாரையும் தவிர, கலைத் துறைகளில், திரைப்படத்துறைகளில், செய்தி, ஒலிபரப்புத் துறைகளில், வைப்பகங்கள் போன்ற பணப் புழக்கத் துறைகள், சுற்றுலாத்துறை, மாந்த அறிவு மேம்பாட்டுத் துறை என்னும் கல்வித்துறை, வான் படை, கப்பற் படை, தரைப் படை போலும் பாதுகாப்புத்துறைகள், அறமன்றத் துறை போன்றவற்றுள்ளும் உள்ள பார்ப்பனர்கள் தங்கள் தங்களால் இயன்ற அளவு அவ்வினத்திற்கும், இனத்தின் கருத்துகளுக்கும் எவ்வளவோ துணிந்து பாடுபட்டு வருகிறார்கள். இந்த வகையில் அவர்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொடுத்தாற் போல் இயங்கி வருவதுடன், அவர்களின் இனத் தலைவர்களாக உள்ள மதத்தலைவர்கள், மடத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள் முதலியவர்களிடம் பக்தியும அன்பும் மதிப்பும் ஈடுபாடும் கொண்டு, அவர்களை முன்னிறுத்தி, எத்தனை எத்தனை நலன்களையோ, பாதுகாப்புகளையோ, வலிவுகளையோ, பொருளியல் ஆக்கங்களையோ தாங்கள் நினைத்த முறையில், நினைத்த அளவில் பெற்றுக்கொள்கிறார்கள்.

இத்தனை வகையான அழிம்புகளாலும், பார்ப்பனியப் படையெடுப்புகளாலும், தமிழினத்தின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, நாகரிகம், முன்னேற்றம் முதலிய அனைத்தும் சீர்குலைக்கப்படுகின்றன; அழிக்கப்படுகின்றன; திசை மாற்றப்படுகின்றன. நம் இனத்தின் பெருமைகளும் உண்மைகளும் மறைக்கப்படுகின்றன. நம் தமிழின இளைஞர்களும், சிறுவர்களும், அடியோடு மூளைச் சலவை செய்யப்பெற்று, அவர்கள் தமிழ் என்றால் எது, என்ன, எப்படி என்று விளங்காதவர்களாக, நம் கலை, பண்பாடுகள் பற்றி ஏதும் அறியாதவர்களாக, வரலாறு உணராதவர்களாக, வாழ்வியல் உணர்வற்றவர்களாக, அடிமைகளாக, உரிமையுணர்வு தெரியாதவர்களாக ஆக்கப்படுகின்றனர்; ஆக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களை, அத்தகைய பேரழிவினின்றும், பேரிழிவினின்றும், தடுத்து நிறுத்துவது மிகவும் அரிது. அவ்வாறு தடுத்து நிறுத்தி, அவர்களை நம் உணர்வுக்கு, தெளிவுக்குக் கொண்டு வருவது மிக மிகக் கடினமானது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். இவ்வகையில் விழிப்படைந்த நம் தலைவர்கள், தொண்டர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள், இனநல, மொழி நலக் காப்பாளர்கள்தாம் மிகவும் விழிப்பாகவும், துணிவாகவும், விடாமுயற்சியொடும், ஊக்கத்தொடும் தந்நலங் கருதாமல் ஈடுபட்டுச் செயலாற்றுதல் வேண்டும்; செய்வார்களா ?

(முற்றும்)

(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள். குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர் அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.

1. செந்தணலின் குறும்புகள் (தொடர்ச்சி)

—சித்திரச் செந்தாழை ஆறிறைவன், அறி.மு., அமெரிக்கா.

13. இனிமேல் மகன் என்று கூப்பிடாதே!

நானும் தணலும் தமிழகத்தில் இருந்தபொழுது, ஒரு நாள் என் தந்தையார் எங்களை (என்னை, என் தங்கையை, தம்பியை, தாயை) அழைத்துக் கீழ்வரும் செய்தியைச் சொன்னார். அது தணலைப் பற்றியது. ஆவலுடன் கேட்டோம்.

"அம்மா, செந்து! தணலைப் பார் அம்மா! அவன் என்ன சொன்னான் என்று கேள். அவன் அதையும் இதையும் எடுத்துக் குறும்பு செய்து கொண்டிருந்தான். நான் அவனை, "அன்பு மகனே! இப்படி குறும்பெல்லாம் செய்யாதே' (My dear son! don't do mischiefs like that) என்று சொன்னேன். உடனே அவன் சற்றும் தயங்காமல், "இனிமேல் என்னை மகன் என்று கூப்பிடாதீங்க! நான் உங்கள் மகன் இல்லை; உங்கள் பேரன்" (Don't call me your son hereafter; I am not your son; I am your grandson.) என்று சொல்கிறான் அம்மா! இவன் சொன்னதைக் கேட்டவுடன் எனக்கு மிக அதிர்ச்சியாகப் போய்விட்டது." என்று தந்தையார் எங்களிடம் கூறினார், அவர் முகத்தில் ஒருவகை வருத்தம் இருந்தது.

14. என்னை விட நீங்கள் கெட்டிக்காரராக இருக்கக் கூடாது!

அதே போல், ஒருநாள் இன்னொரு முறையாகத் தந்தையாரிடம் அவர் மனம் வருந்தும்படி கூறிவிட்டான், தணல்.

ஒரு முறை, தந்தையார் அவனுக்குப் பம்பரம் விளையாடக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். என் தாயாருடன் ஒரு முறை கடைக்கு போனவன், தெருவில் யாரோ பம்பரம் விளையாடுவதைப் பார்த்துவிட்டுத் தனக்கும் பம்பரம் வேண்டும் என்று அவ்வையாரிடம் வம்பு பண்ணி வாங்கிக் கொண்டு வந்தான். ஆனால் அவனுக்கு விளையாடத் தெரியவில்லை. எனவேதான் தந்தையார் அவனுக்கு அதை விளையாடக் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது.

அவர் முதலில் கயிற்றை எடுத்துப் பம்பரத்தில் சுற்றி, அதை எப்படிச் சுழற்றி விடுவது என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்படியே ஒருமுறை இருமுறை விளையாடியும் காட்டினார். அப்புறம் அதேபோல் அவனிடம் கயிறு சுற்றிக் கொடுத்து, அதைச் சுற்றி எறியச் சொன்னார். அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. தந்தையார் மீண்டும் மீண்டும் அப்படியே கயிறு சுற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தார். தணலுக்கு அதைச் சுழற்றி வீசத் தெரியாமல் போகவே, அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. ஒரு தோல்வி மனப்பான்மை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால் அதனால் அவன் சோர்வடைந்து போகாமல், மீண்டும் மீண்டும் கற்றுக் கொள்ள முயற்சி செய்தான்.

இப்பொழுது, அவன் பம்பரத்தில் கயிறு சுற்றித் தரச் சொல்லித் தந்தையாரிடம் தராமல் அவனே தப்புந்தவறுமாகச் சுற்றி ச்சுற்றி வீசினான். தந்தையார் அவன் முயற்சியைக் கண்டு மகிழ்ந்தாலும், அவன் அதைச் சுழற்றிவிடத் தெரியாமல் இடர்ப்பட்டதைக் கண்டு வருந்தி, "அப்படியில்லை தணல் கண்ணு! உனக்குச் சரியாகக் கயிறு சுற்றத் தெரியவில்லை; கொடு நான் சுற்றித் தருகிறேன்" என்று பம்பரத்தை அவனிடம் கேட்டார்.

அதற்கு அவன் உடனே தந்தையிடம், "இல்லை, நானே சுற்றிக் கொள்கிறேன். நீங்கள் என்னை விடக் கெட்டிக்காரராக இருக்கக் கூடாது: நான் அதை விரும்பவில்லை; (I do not want you to be more clever than me)" என்றான்.

அப்பாவின் முகம் வாட்டமடைந்தாலும் அவன் தன்னம்பிக்கையை எங்களிடம் வெகுவாகச் சொல்லிச் சொல்லிப் பாராட்டினார்.

15. வெண்டைக் காயா கூட்டல் கழித்தல் போடும்?

ஒருமுறை வீட்டில் வெண்டைக்காய்க் குழம்பு வைத்திருந்தேன். பொதுவாகவே அக் காயை விரும்பிச் சாப்பிடுவான்;

தணல். ஆனால், அன்று சமையல் முறையில் சிறு குறை காரணமாக வெண்டைக்காய் சற்றே தன் வழவழப்புப் பண்பை வெளியே பூசிக் கொண்டிருந்தது.

எனவே, தணல் காயைத் தள்ளி வைத்துவிட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"தணல்! வெண்டைக்காயைச் சாப்பிடாமல் வைத்து விடாதே! ஒழுங்காய்ச் சாப்பிட்டு விடு! உடலுக்கு நல்லது; வெண்டைக்காய் சாப்பிட்டால் கணக்கு (mathematies) நன்றாகப் போடுவாய்! சாப்பிடு!" என்றேன்.

அதற்கவன் "அதெப்படி, வெண்டைக்காய் சாப்பிட்டால், நான் கணக்கு நன்றாகப் போடமுடியும்? என்னுடைய விரல்களால்தானே என்னால் கணக்குப் போடமுடிகிறது. பார்-என்னால் கூட்டவோ, கழிக்கவோ என் விரல்கள் மிகவும் உதவுகின்றன" என்றான்,

16. உடைக்க முடியாதது எது?

ஒருமுறை நானும் தணலும் வண்டியில் போய்க்கொண்டிருக்கும்போது வெளியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டே செந்தணலிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். பெரும்பாலும் அவன் கவனத்தைத் திருப்புவது என் வழக்கம். இல்லெனில் அவன் கை சும்மாவே இருக்காது!

இருவரும் ஒருவரை ஒருவர் கேள்வி கேட்கவேண்டும். மற்றவர் விடை சொல்ல வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு முதலில் அவனிடம் நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். அதற்கவன் விடை கூறிவிட்டு, அவன் என்னைத் திருப்பி ஒரு கேள்வியைக் கேட்டான்.

"உடைக்க முடியாதது என்ன? (the one which we can not break! what is it?)"

"அழிப்பான் (Rubber), தண்ணீர் (water)" என்று ஒவ்வொன்றாக நான் சொல்லச் சொல்ல, அவன் 'இல்லை' 'இல்லை' என்று சொன்னான்.

பிறகு அவன், 'you give up. (நீ, விட்டுக் கொடுத்துவிடு; அஃதாவது உன்னால் முடியாது என்று கூறிவிடு!) என்றான்.

"சரி! நான் விட்டுக் கொடுத்துவிட்டேன். அதற்கு என்ன விடை நீயே சொல்" என்று சொன்னேன்.

அவன் உடனே சற்றும் தயங்காமல், "we cannot break the universe: —(இந்தப் புடவியை(பிரபஞ்சத்தை) நாம் உடைக்க முடியாது)" என்றான்,

எனக்கு அவன் அறிவியலறிவைக் கண்டு வியப்பு மேலிட்டது.

வரலாறு திரும்புகிறது!

1. முன்னைய கிழக்கு செருமனி, பொதுவுடைமை நாடாக இருந்தது; மேற்கு செருமனி குடியரசு நாடாக இருந்தது. இரண்டும் 1990 ஆம் ஆண்டில் ஒரே நாடாக இணைந்தன, இந்த இணைப்பு நிகழ்ந்தவுடன், பழைய இட்லரின் கொள்கை புத்துயிர் பெற்று வருவதாகக் கூறப் பெறுகிறது. அஃதாவது ''செருமனிக்குள் செருமானியர் தவிர வேறு எவரும் வசிக்கக்கூடாது, செருமானியர்கள் இட்லரின் கொள்கைகளை மட்டும் பின்பற்ற வேண்டும். இப்போது செருமனி ஒரு பெரிய நாடாக ஆகிவிட்டது. இட்லரின் கொள்கைப்படி உலகம் முழுவதையும் அடக்கி ஆள்வதற்கே செருமனியர்கள் பிறந்துள்ளனர்'' என்ற இட்லரின் கொள்கையைப் புதுப்பித்துக் கொண்டுள்ள புதிய நாசிசக் கட்சி ஒன்று அங்கு வலுப்பெற்று வருகிறதாம்,

2. இந்த ஆண்டு ஏப்பிரல் தொடக்கர
களில் ஒன்றான இத்தாலியில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. ஒரு பெரும் வியப்பு என்னவென்றால், முன்பு இத்தாலியின் அனைத்ததிகாரி(சர்வாதிகாரி)யாக இருந்த முசோலினியின் 'பாசிச'க் கட்சியாளர்கள் இதில் கணிசமாக வெற்றி பெற்றுள்ளார்கள். முசோலினிக்குப் பிறகு குடியரசு அமைப்பே அந்த நாட்டில் இருந்து வருகிறது. ஆனால் அந்த அரசு அமைப்புகள் நிலையாக இருப்பதில்லை. அடிக்கடி அரசு கவிழ்ப்புகள் ஏற்படும். இவ்வாறு முசோலினிக்கு—இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு—50 முறை அரசு கவிழ்ந்துள்ளது. இன்றைய நிலையில் இத்தாலி மக்களுக்குக் குடியரசு மீதே வெறுப்பும் அவநம்பிக்கையும் ஏற்பட்டு விட்டது. காரணம், தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் திறமையற்றவர்களாகவும், கையூட்டு ஊழல், சுரண்டல், கொள்ளையடிப்புப் பேர்வழிகளாகவும் இருப்பதுதான். குடியரசு அமைப்பு அரசு வெற்றி பெறவில்லையானால் மீண்டும் அனைத்ததிகார (சர்வாதிகார) ஆட்சிதான் என்பதற்கு இத்தாலியும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17—2—91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல் !

வெள்ளைத்தாள் பதிப்பு : 9-00 அச்சுத்தாள் பதிப்பு : 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு. அஞ்சல் செலவு : 2-00

தென்மொழி, சென்னை-5.

சனியால் வரும் கேட்டுக்கு என்ன செய்வது?

புகழ் பெற்ற உருது புதின(நாவல்) ஆசிரியரான முன்சி பிரேம்சந்திடம் ஒரு நாள் ஒரு கணிய(சோதிட)ப் பெண் வந்தாள்.

''சனி பகவா''னின் தீய பார்வை உங்கள் மீது விழுந்திருக்கிறது. ஆயினும் காலம் இன்னும் கடந்து விடவில்லை. தகுந்த தீர்வு (பரிகாரம்) எதையேனும் செய்து விடுங்கள். இல்லையேல் 'சனி' உங்களை உயிரோடு விட்டு வைக்காது!'' என்றாள் கணியப் பெண்.

''அப்படியா?''—வியப்பு கலந்த குரலில் கேட்ட பிரேம்சந்த் அந்தப் பெண்ணை உட்காரச் சொன்னார். பிறகு கூறினார். ''சனி தேவனின் ஆற்றலை (சக்தியை) நீங்கள் கூறிய போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. சொல்கிறேன் கேளுங்கள்!''

கணிய(சோதிட)ப் பெண் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இது குட்டிக் கதைதான்; உங்கள் நேரத்தைப் பாழாக்க மாட்டேன்'' என்று கூறிய பிரேம்சந்த் கதை சொல்லத் தொடங்கினார்.

ஓர் ஏழை, ஒரு பெரிய பண்டிதரிடம் சென்று, தன் துன்பங்களைச் சொல்லிப் புலம்பினான்: ''பண்டிதர் அவர்களே! என் மீது 'சனி பகவா'னின் தீய பார்வை பட்டிருக்கிறது. தாங்கள்தாம் எப்படியாவது என்னைக் காப்பாற்ற வேண்டும்!''

பண்டிதர் கூறினார்: ''சனியை நிறைவு(திருப்தி)ப்படுத்த ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. யாராவது ஒரு பிராமணருக்கு ஏதேனும் ஒரு கறுத்த பொருளைத் தானம் கொடுக்க வேண்டும்!''

அந்த ஏழை கேட்டான் ''என்ன கொடுப்பது?''

''ஒரு யானை'' என்றார் பண்டிதர். இதைக் கேட்ட ஏழை அரக்கப்பரக்க விழித்தான்.

நிலைமையைப் புரிந்து கொண்ட பண்டிதர், ''சரி யானை இல்லையென்றால், ஓர் எருமையைத் தானம் செய்'' என்றார்.

'தன்னால் முடியாது' எனும் தன்மை(பாவனை)யில் ஏழை தலையை ஆட்டினான்.

''சரி, ஒரு மூட்டை எள் வாங்கி தருமம் செய்!''

''எள்ளுக்கு நான் எங்கே ஐயா போவது?'' என்றான் ஏழை.

''கறுப்பு நிறக் கம்பளி உண்டா?''

''இல்லையே, ஐயா''

பொறுமை இழந்த பண்டிதர் கூறினார்: ''அப்படியானால் நீ ஒன்று செய். உன் வீட்டில் ஒரு துண்டு அடுப்புக் கரி இருந்தால் அதையாவது தானம் செய்!''

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க)

எலிகள்!

எலிகளுக்குப் பார்வைத்திறன் குறைவாகவும், காது கேட்கும் திறன் கூடுதலாகவும், மோப்ப ஆற்றல் அதைவிடக் கூடுதலாகவும் உள்ளதாம். அவற்றிற்கு நிறவேறுபாட்டை அறியும் ஆற்றல் இல்லை. புதிய பொருள்களைக் கண்டு தயங்கும். எலி எப்பொழுதும் தனக்குப் பழக்கமான பாதையிலேயே போய் வரும். 20 அடி உயரத்திலிருந்து தலை குப்புற விழுந்தாலும் கீழே விழுவதற்குள் தன்னைச் சமநிலைப் படுத்திக் கொள்ளும்.

எலிகள் உணவின்றி, 7 நாள்களும், நீரின்றி 2 நாள்களும் உயிர் வாழும். ஒரு செ. மீ. இடைவெளியில் கூட நுழைந்து செல்லும் ஆற்றல் அதற்குண்டு. 90 விழுக்காட்டு எலிகள இரவில் மட்டுமே நடமாடும்.

ஒரு சுண்டெலி ஒன்றரை மாதத்தில் இனப்பெருக்கம் செய்யும் பருவம் அடைந்து விடும். ஒரு பெண் எலி, அதனுடைய குட்டிகள், அதனுடைய குட்டிகளின் குட்டிகள் எல்லாம் சேர்ந்து ஓர் ஆண்டில் 1270 எலிகளாகி விடும்.

எலிகள் விளையும் பொருள்களில் 5 விழுக்காட்டைத் தின்று விடுகின்றன. அவை இந்த இளவு சேதம் செய்வதற்கு அவற்றின் பற்களே காரணம். எலிகள் பிறந்தவுடன் வளரத் தொடங்கும் பற்கள் மாதம் ஒரு செ. மீ. என்னும் அளவில் சாகும் வரை வளர்ந்து கொண்டே இருக்கும். தங்களின் பல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தத்தான் எலிகள் எதையாவது கடித்துக் கொண்டே இருக்கின்றன. இப்படிச் செய்யாவிடில் அப்பற்களே அவற்றிற்கு எமனாகி விடும்.

— தி. சு. பாலசுப்பிரமணியன்.
வேளாண்மை அலுவலர், முசிறி.
நன்றி. 'தினமணி' 4-8-92

(முன் பக்கத் தொடர்ச்சி)

"என் வீட்டில் அதுவும் இல்லையே ஐயா" என்றான் ஏழை.

இப்பொழுது பண்டிதருக்கு வெயர்க்கத் தொடங்கி விட்டது. அவர் கூறினார்.

"உன் வீட்டில் ஒரு துண்டு அடுப்புக்கரி கூட இல்லையென்றால் பிறகு சனி பகவானால் உனக்கு என்ன தீங்கு செய்துவிட முடியும்? ஒன்றன்று ஓராயிரம் சனி சேர்ந்து வந்தாலும் உன்னுடைய ஒரு மயிருக்குக் கூட எந்தத் தீங்கையும் ஏற்படுத்துவது இயலாது."

இக்கதையைச் சொல்லி முடித்தபிரேம்சந்த் புன்முறுவலுடன் கூறினார்: "என் நிலையும் அந்த ஏழையைப் போன்றதுதான்! சனி பகவானின் தீய பார்வை என்னை என்ன செய்துவிடும்?"

மறு நொடி அந்தக் கணிய(சோதிட)ப் பெண் அங்கு இல்லை.

— நன்றி! சமரசம், 16-30 செப்-92

அக்பரின் ஆட்சி வழிமுறை!

முகலாய அரசர்களில் அக்பர் படிப்பறிவில்லாதவர்; இருப்பினும் சிறந்த அறிவாளி. கல்வியின் மேன்மையை உணர்ந்தவர்; செயல்திறன் மிக்கவர்; சிறந்த அரச தந்திரி; இவரை எதிர்த்த இராசபுத்திர மன்னர்களை, அக்பர் அந்த மன்னர்கள் ஒரு சிலரின் துணையைக் கொண்டே அடக்கி ஆண்டார். 'யானையால் யானை யாத்தற்று' என்னும் திருக்குறள் கூறும் அரச தந்திரத்தை தம் எதிரிகளிடம் காட்டி வெற்றி பெற்றவர் அக்பர். இராசபுத்திரர்களிடம் தம் உறவை உறுதிப் படுத்திக்கொள்ள அந்த இனத்துப் பெண் ஒருத்தியையும் திருமணம் செய்து கொண்டார். இதுவன்றி வேறு சமயங்களைச் சேர்ந்த பெண்களையும் திருமணம் செய்து கொண்டு ஓர் ஒப்புரவான ஆட்சியை நடத்திய ஆட்சித் திறன் கொண்டவர் அக்பர். இந்து சமயத்தையும் இசுலாம் சமயத்தையும் இணைந்த தீன் இலாகி, என்ற ஒரு புது சமயத்தையும் தோற்றுவிக்க முயற்சி செய்தார். ஆனால் இசுலாமிய சமயத் தலைவர்களின் எதிர்ப்பும், இந்து சமயத்தவருடைய ஒத்துழையாமையும் இம் முயற்சியைத் தோல்வியுறச் செய்தது.

ஆனாலும், அக்பர் தம் அரசவையில் அனைத்துச் சமயங்களையும் சேர்ந்த அறிஞர்களையும் கலைஞர்களையும் சமநோக்குடன் வைத்துப் பெருமைப்படுத்தினார்; அவர்களை ஆதரித்தார். இதனால் பலரும் இவருக்குத் துணை நின்றார்கள்.

மன்னர் அக்பருக்கு நீண்ட காலம் குழந்தைப் பேறு இல்லை. இதனால் பிள்ளைப் பேறு வேண்டி இவர் பல இசுலாமிய, இந்துக் கோவில்களுக்குச் சென்று வழிபட்டார். இறுதியில் இவரின் இராசபுத்திர மனைவியான ஜோதா பாயிக்கு ஒரு மகன் பிறந்தான். அவன்தான் சலீம். சலீம் ஒரு பெருங்குடியன்; காமப் பித்தன். இவன் திருமணம் ஆனவன். மனைவி பெயர் நூர்ஜஹான். கணவன் எப்பொழுதும் குடியிலும் கூத்தியிலும் மூழ்கியிருந்ததால் நூர்ஜஹானே திரைமறைவிற்குப் பின்னிருந்து அரச செயற்பாடுகளைக் கவனித்து வந்தாள்.

சலீமுக்கும் நூர்ஜஹானுக்கும் குர்ரம் என்னும் ஒரு மகன் பிறந்தான். இவன் தன் தந்தைக்கு மாறான குணநலன்களைக் கொண்டவன். இவன் தான் பின்னர் ஷாஜஹான் என்ற பெயரில் அரசுக் கட்டிலில் ஏறினான். இவனே மும்தாஜ் என்பவளை மணந்து தாஜ்மஹாலைக் கட்டியவன்.

அக்பரின் மகன் சலீம் ஒரு நடனப் பெண்ணாகிய அனார்கலியைக் காதலித்தான் என்பதும், அவள் அரச தண்டனை பெற்று உயிரிழந்தாள் என்பதும், அவளால் இவனும் உயிர் துறந்தான் என்பதும், வரலாறும் கற்பனையும் கலந்த செய்தியாகவே கருதப் பெறுகிறது.

O

O அயர்லாந்தில் உள்ள நான்கு இனக் கோழிகள் பச்சைநிற முட்டைகள் இடுகின்றனவாம்.

இந்தியாவில் மக்கள் தொகை!

(ஒரு விளக்கம்)

1991-ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 68 கோடியே 95 இலக்கம். இத்தொகை 2020ஆம் ஆண்டில்—அஃதாவது இன்னும் 18 ஆண்டுகளில் 131 கோடியே 17 இலக்கமாக அதிகரிக்கும் என்று அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை மதிப்பீடு செய்துள்ளது.

இதுமட்டுமல்லாது, அக்கால் உலகில் மக்கள் தொகை மிகுதியாக உள்ள நாடுகளில், சீனாவுக்கு அடுத்தபடி இந்தியா 2-ஆவது வரிசையில் இருக்கும். சீனாவின் மக்கள் தொகை அப்போது 154 கோடியே 10 இலக்கம் என்னும் அளவுக்கு உயர்ந்து விடும். அப்பொழுது அஃதாவது 2020-இல் உலக மக்கள் தொகை 820 கோடியாக இருக்கும் என்று அந்தக் கணக்கீடு கூறுகிறது.

இந்தியாவில் கற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 36 கோடியே 40 இலக்கம். இவர்களில் 13 கோடியே 20 இலக்கம் பேர் பெண்கள்.

படிக்காதவர்கள் 20 கோடியே 50 இலக்கம் இவர்களில் பெண்கள் 61 விழுக்காட்டினர். இன்றைய நிலையில் (1991-இல்) இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 84 கோடியே 40இலக்கம்.

உலகிலேயே மக்கள் தொகை மிகுந்த நாடு சீனாதான். ஆனால் கி.பி. 2000-இல் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவை விட விஞ்சி விடும் என்று மக்கள் தொகை ஆய்வாளர்கள் சிலர் கூறுகிறார்கள்.

நல்ல உடலைப் பெற நல்ல வழிகள்

1. காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.
2. கை, கால்களை நீட்டி மடக்கி நாள்தோறும் எளிய உடற் பயிற்சி செய்க.
3. ஒவ்வொரு நாளும் 20 மணித்துளிகள் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்க.
4. எப்போதும் கொழுப்பு, சர்க்கரை, உப்பு ஆகியவற்றின் அளவைக் குறைத்து உண்ணுங்கள்.
5. பச்சைக் காய்கறிகள், பழங்கள் கீரைகள் அன்றாட உணவில் இடம் பெறச் செய்க.
6. நிறைய நீர் அருந்துக.
7. புகை, புகையிலை, மது வகை அறவே தவிர்த்திடுக.
8. ஆண்டிற்கு ஒரு முறை கண், பல், உடல் மருத்துவ ஆய்வு செய்து கொள்க.
9. நொறுக்குத் தீனி தின்னற்க.
10. அகவை ஏற ஏற உணவின் அளவு குறைவதாக.
11. மோர், தயிர் நிரம்ப அருந்துக.

— பெரியார் நாட்குறிப்பு, 1992.

'இயற்கைச் சீற்றங்களும் உயிரினங்களும்'

நில நடுக்கங்கள் ஏற்படப் போவதையும் எரிமலைகள் சீறப் போவதையும் அறிவியல் அறிஞர்கள் கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு முன்கூட்டியே இக்கால் அறிய முடியும். ஆனால் இந்நிகழ்ச்சிகளை அவ்வந் நிலப் பகுதிகளிலும் வாழும் பல உயிரினங்களும் சில மணிநேரங்களுக்கு—சில நாள்களுக்கு—முன் கூட்டியே அறிந்து கொள்வதாகவும் உயிரியல், நிலவியல் ஆய்வறிஞர்கள் கூறி வியக்கின்றனர்.

சப்பானில் பூனை மீன்கள் (cat fish) என்றொரு வகை மீன்கள் கடல் நீரின் ஆழத்தில்தான் வாழும். ஆனால் நில நடுக்கம் ஏற்படுவதற்குச் சில நாள்களுக்கு முன்னரே, அவை நீர் மட்டத்திற்கு மேல் அடிக்கடி வருவதுடன், மிக வேகமாகவும் நீந்தத் தொடங்கி விடுகின்றனவாம். எல்லா மீன்களும் இப்படி இல்லையென்றாலும் சில வகை மீன்கள் நில நடுக்கத்தின் முன் இவ்வாறு செய்கின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சீனாவிலும் மீன்கள் இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். சீனாவில் மிகுதியாக இப்படிச் செய்வது சல்மான் என்னும் ஒரு வகை மீனும். ஆய்வாளர்கள் மேலும் கூறுவன:

நில அதிர்வு ஏற்படுவதற்கு முன்னர் நாய்கள் அமைதியற்று அங்கும் மிங்கும் அலைகின்றன; ஊளையிடுகின்றன; பூனைகள் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேறி, தோட்டம், காடு போன்ற பகுதிகளுக்கு ஓடி விடுகின்றன; பாம்புகள் புற்றுகளிலிருந்து வெளியேறுகின்றன; கோழிகள் வீட்டுக் கூரைகள் மேலும், மரங்களின் உச்சியிலும் பெரும்பாலான நேரத்தைச் செலவிடுகின்றன.

திபெத்திய 'யாக்' என்னும் சடை எருமைகள் மண்ணில் விழுந்து புரள்கின்றன. மரமேறும் 'பண்டா' என்னும் கரடிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு கூச்சலிடுகின்றன. அன்னப்பறவைகள் தண்ணீரை விட்டுத் தரையில் வந்து நின்று கொள்கின்றன; நாய்கள் இடைவிடாமல் குரைக்கின்றன. விலங்குகள் பூங்காவிலிருந்த யானைகள் பிளிறல் ஒலியுடன் பாகர்களைத் தாக்க வந்தன. அங்கிருந்த பல விலங்குகள் உணவு உண்ண மறுத்து விட்டன.

இவ்வாறான நுணுக்கமான மாறுதல்களை விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு முன்கூட்டியே அறிந்து கொள்கின்றன என்பது உயிரியல் ஆய்வறிஞர்களுக்கே வியப்பை அளிக்கின்றனவாம்.

— செய்தி . 'தினமணி' 15-5-92

அன்பர்கள் கவனிக்க

பல வகையான அச்சக நெருக்கடிகளாலும், புறநிலை இடர்ப்பாடுகளாலும் இதழ்கள் காலந் தாழ்ந்தே வெளி வருகின்றன. அன்புள்ளவர்கள் பொறுத்துக் கொள்க.

—ஆசிரியர்

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

26. பூடான் (BHUTAN) —குடியரசு

நிலப்பரப்பு : 4,66,000 ச.அ.மா.
மக். தொ : 12,50,000
மக். தொ. பெ : 2.2%
மக். வா. எ : ஆண்: 44, பெண்: 43 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 5%
தலைநகர் : திம்பு
மொழி : ஜோங்கா, நேபாலி
நாணயம் : கல்ட்ரம் = 100 செட்ரம்ஸ்

27. பங்களாதேஷ் (BANGLADESH) —குடியரசு

நிலப்பரப்பு : 14,39,98 ச.அ.மா.
மக். தொ : 9,60,00,000
மக். தொ. பெ : 2.8%
மக். வா. எ : ஆண் : 46, பெண் : 46 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 25%
தலைநகர் : டாக்கா
மொழி : பெங்காலி, ஆங்கிலம்
நாணயம் : டக்கா = 100 பொய்ஷா

28. பர்மா (BURMA) —குடியரசு

நிலப்பரப்பு : 67,65,52 ச.அ.மா.
மக். தொ : 3,53.10,000
மக். தொ. பெ : 2.4%
மக். வா. எ : ஆண் : 51, பெண் : 54 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 78%
தலைநகர் : இரங்கூன்
மொழி : பர்மீசு
நாணயம் : க்யட் = 100 பியாஸ்

29. தாய்லாந்து (THAILAND) —முடியரசு.

நிலப்பரப்பு : 51,40,00 ச.அ.மா.
மக். தொ : 5,00,00,000
மக். தொ. பெ : 2.3%
மக். வா. எ : ஆண் : 58, பெண் : 63 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 84%
தலைநகர் : குருங் தெப்

மொழி : தாய்
நாணயம் : பகட் = 100 சட்டங்

30. லாவோஸ் (LAOS) —குடியரசு

நிலப்பரப்பு : 23,68,00 ச.அ.மா.
மக். தொ : 35,00,000
மக். தொ. பெ : 2.4%
மக். வா. எ : ஆண்: 42, பெண் : 45 (ஆண்டு ள்
எழுத்தறிவு : 28%
தலைநகர் : வியண்டியான்
மொழி : லா
நாணயம் = 100 அட்

31. வியட்நாம் (VIEATNAM) —குடியரசு

நிலப்பரப்பு : 3,29,566 ச.அ.மா.
மக். தொ : 6,00,00,000
மக். தொ. பெ : 2.3%
மக். வா. எ : ஆண் : 51, பெண் : 54 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 73%
தலைநகர் : அனோய்
மொழி : வியட்னாமீஸ், பிரெஞ்சு, ஆங்கிலம்
நாணயம் : டங் = 10 அஓ = 10 சூ

32. தைவான் (TAIWAN) —குடியரசு

நிலப்பரப்பு : 3,6,174 ச.அ.மா.
மக். தொ : 1,88,00,000
மக். தொ. பெ : 1.8%
மக். வா. எ : ஆண் : 70, பெண் : 75(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 89%
தலைநகர் : தைப்ஈ
மொழி : சைனீஸ்
நாணயம் : புதிய தைவான் டாலர் = 100 செண்ட்ஸ்

33. மாலத்திவுகள் (MALDIVES) —குடியரசு

நிலப்பரப்பு : 298 ச.அ.மா
மக். தொ : 1,68,000
மக். தொ. பெ : 2.9%
மக். வா. எ : விளக்கம் கிடைக்கவில்லை
எழுத்தறிவு : 36%
தலைநகர் : மாலே
மொழி : டிவிகி
நாணயம் : ருஃபியா = 100 லாரீஸ்

(தொடரும்)

பழங்களும், கிடைக்கும் பருவ மாதங்களும்

(ஆங்கில மாதப் பெயர்கள் கொடுக்கப் பெற்றுள்ளன)

மாம்பழம் — மார்ச்சு பிற்பகுதி முதல் ஏப், மே, சூன் வரை.
அரத்தி (ஆப்பிள்) — ஆகத்து, செப், அக், நவம்.
ஆரஞ்சு — திசம்பர், சனவரி, பிப்ரவர், மார்ச்சு.
சப்போட்டா — ஏப், மே, சூன், சூலை, ஆக, செப்.
(சீமை இலுப்பை)

பிளம் — மே, சூன்.
சாத்துக்குடி — சூலை, ஆக, செப், அக்.
கொடி முந்திரி — சன, பிப், மார், ஏப்.
திராட்சை
கொட்டையில்லாத சிறியவை)
கொட்டைகள் உள்ள — ஏப், முதல் நவம்பர் வரை.
பெரியவை

கருப்பு வகை
பன்னீர் வகை } ஆண்டு முழுவதும்

சீத்தாப்பழம் — நவம், திசம்.
பலாப்பழம் — பிப், மார், ஏப், மே.
கொய்யாப்பழம் — சூன் முதல் சனவரி வரை.
பேரிக்காய் - ஆகத்து.
தர்பூசனி — மார், ஏப்.
மாதுளை — திசம், சனவரி.
கிர்ணிப்பழம் — சன, பிப்
அன்னுசி
(செந்தாழம் பழம்) } திசம், சனவரி
மீண்டும் சூன் முதல் அக்டோபர் வரை
எலுமிச்சை — மே, சூன் (மிகுதி)

○ சப்பானில் பணப் புழக்கம் மிகுதி. 22 அகவையுள்ள பெண் ஊழியர் ஒருவர் மாதம் ஒன்றிற்கு ஏறத்தாழ உருபா 32,000 சம்பளம் பெறுகிறார்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களி மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண் வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

ஏனெனில் அந்நாடுகளில் பெண்கள் கருத்தரிப்பது குறைவாக உள்ளதாம்.

- இந்தியாவில் ஓர் ஆண்டில் தோராயமாக 4 இலக்கம் சாலை நேர்ச்சிகள் (accidents) நடைபெறுகின்றன. அவற்றுள் தமிழகத்தில் மட்டும் 35,000 முதல் 40,000 நேர்ச்சிகள் ஏற்படுகின்றன. இவற்றால் தமிழகத்தில் ஆண்டுக்கு ஏறத்தாழ 7000 பேர்கள் இறந்து போகின்றனர். இவர்களுள்ளும் செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகம் பேர்—ஏறத்தாழ 800 பேர்கள் அளவில் இறக்கின்றனர்.

- தமிழகத்தில் ஏறத்தாழ 16 இலக்கம் போக்குவரத்து ஊர்திகள் இயங்குகின்றன.

- தமிழ் நாட்டுக் கோயில்களில் உள்ள சிலைகள், நகைகள் ஆகியவை திருட்டுப் போகாமல் தடுக்க, 4000 பேர்களைக் கொண்ட கோயில் பாதுகாப்புப் படையொன்றை ஆண்டுக்கு 5½ கோடி உருபா செலவில் தமிழக அரசு அமைக்க விருக்கிறதாக முதலமைச்சர் செயலலிதா அறிவித்திருக்கிறார்.

- பொருள்களின் சுவையை அறிய நம் நாக்கில் 9000 சுவை அரும்புகள் உள்ளன.

- பிரிட்டனில் உள்ள ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் இதுவரை இரண்டு திரைப்படக் கலைஞர்களுக்கு மட்டுமே முனைவர் (டாக்டர்) பட்டங்கள் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. அவர்களில் ஒருவர் சார்லி சாப்ளின்; மற்றொருவர் அண்மையில் காலமான திரைப்பட இயக்குநர் — சத்ய ஜித்ராய்

- தமிழ்நாட்டில் மொத்தம் 34 811 இந்துக் கோயில்களும் நிறுவனங்களும் உள்ளன. இவற்றுள் 55 பெரிய கோவில்களும், ஒரு குறிப்பிட்ட வருவாய்க்கு மேல் உள்ள 32,723 கோயில்களும், 17 சமணக் கோயில்களும், 56 மடங்களும், 1721 குறிப்பிட்ட சமயப் பணிக்கான அமைப்புகளும், 189 பொதுவான சமயப்பணி நிறுவனங்களும் அடங்கும். மேலும் இவற்றுள், ஆண்டிற்கு 10,000 உருபாவுக்கு மேல் வருமானமுள்ள கோயில்கள் 2,121-உம், ஓர் இலக்கத்திற்கு மேல் உள்ள பெரிய கோயில்கள் 296-உம் உள்ளன. ஆக ஒரு தோராயமாக, தமிழகத்திலுள்ள அத்தனைக் கோயில்களிலிருந்தும் மொத்தமாக 175 கோடி உருபா வருமானம் வருவதாகக் கணக்கிடலாம்.

- இன்றைய நிலையில் (92 மார்ச்சு 31—இல்) இந்தியாவில் மொத்தம் 1,48,719 அஞ்சலகங்கள் உள்ளன. இவற்றுள் 1,32,646 அஞ்சலகங்கள் சிற்றூர்ப் புறங்களிலும், 16,073 அஞ்சலகங்கள் நகரங்களிலும் உள்ளன.

- இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் (1901 இல்) இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் இருந்தனர். ஆனால் 90 ஆண்டுகளுக்குப் பின் (1991—இல்), 1000 ஆண்டுகளுக்கு 929 பெண்கள்தாம் இருக்கின்றனர். இந்தியாவில் பெண்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

- திருக்குறளை ஒரு கடைப்பிடி நூல் என்று முழங்குதல் பொருந்தாது. அஃது ஓர் அறச்சாலை, மருத்துவமனை; அதில் யாருக்கு என்ன வேண்டுமோ அது கிடைக்கும். ஒரு நோயாளிக்கு என்ன மருந்து வேண்டுமோ அதைத் தருவதே மருத்துவமனை! அங்குள்ள எல்லா மருந்துகளையும் ஒருவன் உண்ணத் தேவையில்லை.

ஆசிரியர்களின் அவல நிலை!

O தமிழகத்தில் உள்ள மொத்த தொடக்கப் பள்ளிகள் 29,907. இவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் 71,336; ஆசிரியைகள் 48,585. இவர்களுள் ஆண்டுதோறும் ஓய்வு பெறுபவர்கள் 4,000-பேர். இந்த வெற்றிடங்களுக்கும், மாணவர்களின் புதிய சேர்க்கைகளால் உருவாக்கப்படும் பணியிடங்களுக்கும் புதிய ஆசிரியர்கள் சேர்க்கப்படுவதில்லை என்னும்குறையை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி கூறுகிறது. இதில் இன்னும் உள்ள ஒரு கொடுமையான வியப்பு என்னவென்றால், இன்றைய நிலையில் ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் பயிற்சி ஆசிரியர்கள் ஏறத்தாழ 45,000 பேர் உள்ளனராம்!

உலக உளவு நிறுவனங்கள்!

O ஏற்கனவே அமெரிக்க உளவு நிறுவனம் (C.I.A)உம், உருசிய உளவு நிறுவனம் (K.G.P)யும், இந்தியாவில் 1947 முதலே இயங்கி வருவதும், அவற்றுடனும், பிற பிரான்சு, போலந்து, செருமன் நாட்டு உளவு நிறுவனங்களுடனும் இந்திய தலைமையமைச்சர் அலுவலகத்திலும் நடுவண் உள்துறை அமைச்சகத்தில் பணியாற்றிய அமைச்சர் மொரார்சி, கோபாலன், சங்கரன், டி.என். கவுர், கே.கே. மல்கோத்தரா, சி.எல். செனுனு போன்றவர்களும் தொடர்பு கொண்டு, இந்தியாவின் படைத்துறை, தொழில் நுட்பம், அரசியல் உள்பட அனைத்துத் துறைக் கமுக்கங்களையும் விற்றுவந்ததுடன்,பலவகையான ஆளழிப்புகள், அதிகார மாற்றங்களுக்கும் காரணமாக இருந்ததெல்லாம் ஊரும் உலகமும் அறிந்த செய்திகள். இந்த முயற்சிகளை அரசு இன்னும் ஒடுக்கி விடவில்லை. இத்தகைய முயற்சிகளில் ஒன்றாகவும் இராசீவின் அழிப்புச் செயலும் இருக்கலாம் என்று அரசியல் உயர் மட்டங்களிலும் கட்சிகளிலும் உள்ள அதிகாரிகள் சிலரும் கருத்துத் தெரிவித்துள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பாராளுமன்றச் செலவு 1000 கோடி உருபா!

O பாராளுமன்றத் தேர்தலில், பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தோராயமாக 2 கோடி செலவழிக்கப்படுகிறது. இதை அரசும் வேட்பாளரும் சேர்ந்துச் செய்த செலவாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு வேட்பாளர் தன்னளவில் 15 இலக்கம் முதல் 25 இலக்கம் வரை செலவிடுகிறார். மீதி 1.75 கோடியை அரசு செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த வகையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 2 கோடி மேனி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆகும் மொத்த செலவு தோராயமாக 1000 கோடி உருபா ஆகும். இது மக்கள் பணமாகும். இந்தப் பணத்தில் பம்பாய். கல்கத்தா, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சென்னை போலும் பெரிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஆண்டுக்குத் தேவையான திட்டப் பணிகளைச் செய்து முடிக்கலாம். இவ்வளவு செலவு செய்து நடத்தப் பெறுகிற தேர்தலும் ஒழுங்காக நடப்பதில்லை என்பது உலகறிந்த செய்தி!

O

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)